www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

(Ariyalur district)
G.K.Puram. - 612901

பதிவு எண்: 10361

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

வகுப்பு : 10 **தமிழ்** மதிப்பெண்கள் : 100
நேரம் : 3.00 மணி

## பகுதி - 1

**(I). சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **15x1=15**

1. "மெத்த வணிகலன்" என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும்காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. வேர்க்கடலை மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலை வகை

3. "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லை பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

4. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது.
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. காசிகாண்டம் என்பது :-
அ) காசிநகரத்தின் வரலாற்றைப்பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக்குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைபாடும்நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிபடுத்தும் நூல்

6. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது.
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) இலா ஈ) குலா

8. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ...........இடைகாடனாரிடம் அன்பு வைத்தவர்............
அ) அமைச்சர் மன்னன் ஆ) அமைச்சர் இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

9. "பெரியமீசை சிரித்தார்" இச்சொல்லுக்கான தொகையின் வகை எது? அ) பண்புத்தொகை
ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

10. தனி மொழியைத் தேர்வு செய்து எழுதுக.
அ) கண்ணன் ஆ) கண்ணன் வந்தான்
இ) வேங்கை ஈ) கண்ணன் பாடம் படித்தான்

11. இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது ........... வினா?
"அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ......... விடை
அ) ஐயவினா, வினாஎதிர்வினாதல் விடை ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல்வினா, இனமொழிவிடை

பாடலைப் படித்து விடை தருக.

"செந்தமிழே உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்"



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் :
    அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் +நா
13. செந்தமிழ் என்பது அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
    இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
    அ) தம்தாயை ஆ) தமிழ்மொழியை இ) தாய்நாட்டை ஈ) தம்குழந்தையை
15. வேறார் புகழுரையும் - இத்தொடரில் வேறார் என்பது
    அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

## பகுதி - 2 (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**(II) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4x2=8

16. வசன கவிதை - குறிப்பு வரைக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) பத்துப்பாட்டு நூல்களும் ஒன்று மாலைபடுகடாம்.
    ஆ) "சதாவதானி" என்று பாராட்டுப் பெற்றவர் செய்குதம்பிப்பாவலர்
18. தமிழ் நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறு கூலங்களின் பெயர்களை எழுதுக?
19. மாஅல் பொருளும் இலக்கணம் குறிப்பும் தருக?
20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக?
21. கண் என முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10 (4)

22. வினா வகைகளை எழுதுக?
23. கலைச்சொற்கள் தருக. அ) Conversation ஆ) Homograph
    குறிப்பு : - செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா
    கூட்டப்பெயர்களை எழுதுக. அ) கல் ஆ) ஆடு
24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. அ) விடு - வீடு ஆ) கொடு - கோடு
25. "பொழிந்த" - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
26. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
    அ) கண்ணும்கருத்தும் ஆ) கயிறுதிரித்தல்
27. பழமொழிகளை நிறைவு செய்க. அ) ஒரு பானை .......... ஆ) விருந்தும் .........
28. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்தி எழுதுக.

    " தேனிலே ஊரிய செந்தமிளின் - சுவை
    தேரும் சிலப்பதிகாறமதை
    ஊனிலே எம்முயிற் உல்லலவும் - நிதம்
    ஓதியுனார்தின் புருவோமே"

## பகுதி - 3 பிரிவு - 1 (மதிப்பெண்கள் - 18)

**(III). எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

29. சோலைக்காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசித் கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.
30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழி பெயர்க்கப் படுகின்றன. புள்ளி விவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம். இரண்டாம் மாலையாம். மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

அ) ஜெர்மனியில் ஓர் ஆண்டில் எத்தனை நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன?

ஆ) தமிழ் நூல்கள் எந்த மொழியில் அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?

இ) மொழிபெயர்ப்பின் பயன் என்ன?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 2x3=6

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) வாளால் அறுத்து எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல்

ஆ) அருளைப் பெருக்கி எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல்

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

"கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந் துறங்கு!.

இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. கவிஞர் தாம் கூற விரும்புற கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக் காட்டுக.

37. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

## பகுதி - 4 (மதிபெண்கள் 25)

**(IV). அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச்செய்திகளை எழுதுக? (அல்லது)

நயம் பாராட்டுக - பாரதியார் பாடலில் அமைந்துள்ள நயங்களை பாராட்டுக.

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?
- பாரதியார்

39. மரம் இயற்கையின் வரம் என்ற தலைப்பில் மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப்போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41. கொடுக்கப்பட்ட நூலகப்படிவத்தை பூர்த்தி செய்யவும்

42. அ) பள்ளியில் நாள், வீட்டில் நான் - என்னும் தலைப்புகளில் நீங்கள் பள்ளியினும் வீட்டிலும் நடந்துகொள்ளும் முறைகள் ஐந்திணைப் பட்டியலிடுக. (அல்லது)

The Golden sun gets up early in the moring and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The howers tragrance tills the breeze. The breeze gently blows every where and makes every thing pleasant.

குறிப்பு செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினை

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும் போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன் வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு வடக்கிலிருந்து வீசும்போது நான் வாடை காற்று எனப்படுகிறேன். நான் பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சிலான ஊதைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.

i) மேற்கிலிருந்து வீசும் காற்று யாது?
ii) ஊதைக் காற்று என்று அழைப்பதேன்?
iii) மேற்கு என்பதன் மற்றொரு பெயர்என்ன?
iv) வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?
v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை எழுதுக?

## பகுதி - 5 (மதிபெண்கள் 24)

**(V). அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும்.** 3x8=24

43. தமிழ்மொழி சொல் வளமுடையதென்னும் தமிழ்நாடு பொருள் வளமுடையது என்னும் தெளிவாக விளக்குவதற்காக காரணங்களை தொகுத்து எழுதுக. (அல்லது)

போராட்டக்கலைஞர் - பேச்சுக்கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக்கலைஞர் - இயற்றமிழ்க்கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

44. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் "கோபல்லபுரத்து மக்கள்" கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை.

மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையை எழுதுக.

45. "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

---



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com